( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

CC No. 59/2024

Name பொற்செழியன் **P.W.1**
Father/Husband Name : பாபு ராஜேந்திரன குமார்
Caste :
Calling :
Religion :
Age :
Date : 06-02-2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2025

**முதல் விசராணை – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.** நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் Youtube BMW கார் ஒன்றை பார்த்தேன். சையத் என்பவருக்கு போன் செய்தேன். அவரும் வண்டியை வந்து பாருங்கள் என்று என்னிடம் சொன்னார். நானும் மெக்கானிக்கை அழைத்து சென்று வண்டியை பார்த்தேன். மெக்கானிக் வண்டியில் நிறைய பிரச்சனை உள்ளது என்று சொன்னார். சையத் என்னிடம் நீங்கள் முன் தொகையயை செலுத்துங்கள் வண்டியை சரி செய்து கொடுக்கிறேன் என்று சொன்னார்.அதனால் நான் 28/05/2023 அன்று முன் தொகையாக நான் ரூ. 20 ஆயிரம் கொடுத்தேன். மறுநாள் சையத் எனக்கு போன் செய்து வண்டியை நிறைய நபர்கள் கேட்டுகிறார்கள் அதனால் பணம் செலுத்தி விட்டு வண்டியை எடுத்து செல்லுங்கள் என்று சொன்னார். 01/06/2023 அன்று நான் எனது நகைகளை அடைமானம் வைத்து ஆன்லைன் மூலமாக ரூ. 6,80,000/- சையத்திற்கு அனுப்பி வைத்தேன். **ஆன்லைன் வங்கி கணக்கு ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வண்டியை எடுக்கும்போது வண்டியின் ஆர்சி புத்தகத்தை கேட்தற்கு 1 வாரம் கழித்து தருவதாக சொன்னார். பன்னானர் வண்டியை எடுத்து செல்லும்போது வாய்ஸ் மெசேஸ் மூலமாக எங்களுக்கு ஒரு விடீயோ எடுக்க வேண்டும் என்று கேட்டதால் திரும்ப வந்து வண்டி நல்ல முறையில் உள்ளது என்று சொல்லி வீடீயோ எடுக்கப்பட்டது. பின்னர் 2 , 3 நாட்கள் கழித்து வண்டியில் சத்தம் வரவே நான் சையத்திடம் கேட்தற்கு வண்டியை எடுத்து வாருங்கள் என்று சொன்னதால் நான் வண்டியை எடுத்து வந்து சையத்திடம் கொடுத்தேன். சில நாட்கள் ஆகியும் வண்டியை கொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்தார். வண்டி தான் கொடுக்கவில்லை வண்டியின் ஆர்சி புத்தகத்தை கொடுங்கள் என்று கேட்தற்கு

அப்போதும் காலம் தாழ்த்தி வந்தார். பின்னார் என் மனைவி வண்டி தேவையில்லை நகையை மீட்டு கொடுங்கள் என்னிடம் கேட்டதற்கு நான் சையத்திடம் வண்டி பற்றி கேட்டேன் அவரிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. பிறகு சையத் நான் வெளிஊரில் உள்ளேன் என் நண்பர் சுசாந்த் என்வர் வண்டியை விற்று பணம் தருவார் என்று சொன்னார். 26/06/2023 அன்று வண்டியை மூன்று மாதத்திற்குள் விற்று தருவதாக சுசாந்த் உறுதி அளித்தார். 3 மாதம் கழித்து கேட்டபோதும் சுசாந்த் காலம் தாழ்த்தி வந்தார். அதன் பின்னார் நான் அவர் வீடட்டிற்கு சென்று கேட்தற்கு நீ எங்கு வேண்டுமானும் பார்த்து கொள் என்று ஒரு மாதிரியாக பேசினார். பின்னார் நான் 26/03/2024 அன்று கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். **கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு நகல் ம.சா.ஆ. 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** அதன் பின்னார் சையத் மற்றும் சுசாந்த் காரை எடுத்து வந்து காவல் நிலையத்தில் விட்டு விட்டார்கள். நான் அவர்களிடம் காரை கேட்வில்லை பணத்தை தான் கேட்டேன் என்று சொன்னதற்கு பணத்தை தர முடியாது வண்டியை வேண்டும் என்றால் எடுத்து செல் என்று சொன்னார்கள். வண்டியை பார்த்த போது வண்டியின் பதிவு எண் வேறாக இருந்தது. நான் போலிசாரிடம் இந்த வண்டி என்னுடையது இல்லை எனறு சொன்னேன். வண்டியே வேண்டாம் என்று நான் வந்து விட்டேன். நான்கொடுத்த புகாருக்கு மனு ஏற்பு ரசீதுஎண். CSR No 171/2024 வழங்கப்பட்டது. **மேற்படி ரசீது ம.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** PB36E0001 **வண்டியின் புகைப்படம் ம.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. PB53D5521 வண்டியின் புகைப்படம் ம.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கேள்பாக்கம காவல் நிலையத்தில் முறையாக விசாரணை செய்யவில்லை என்பதால் 28/03/2024 அன்று தாம்பரம் காவல் ஆணையரிடம் புகார் கொடுத்தேன். அந்த **புகாருக்கு வழங்கப்பட்ட ஒப்புகை சீட்டு ம.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உரிய உத்தரவு பிறப்பிக்குமாறும் எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்குமாறும் கேட்டு கொள்கிறேன்.

S/d–N.Anupriya, 06.02.2025.

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.